[1992 செப்டம்பர் 23]

நம்பியாபுரம், மேல் நம்பியாபுரம், பொன்னையாபுரம், முடித்தலை, நாருகாபுரம், இனாம் அருணாசலபுரம், ஐயம்பட்டி போன்ற வறண்ட பகுதியில் உள்ள ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் பயன்பெறும். நம்பிபுரத்திற்கு என்று தனியாக அணைக்கட்டு அமைக்கும்போது 1.4 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 70 இலட்சம் செலவிடப்பட வேண்டியுள்ளதால் இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து நம்பிபுரத்திற்கு கால்வாய் அமைத்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு கருணையோடு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய நீர்த் தேக்கம் என்பது நம்முடைய ஒப்பற்ற தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் 1992–93ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலே தான் மிக நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு காமராஜர் மாவட்டத்திலே அந்தத்திட்டம் செயற்படுத்துவதற்கான வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு 28 கோடி ரூபாய். இன்றைக்கு அந்தத் திட்டத்தினால் ஏறத்தாழ 18 கிராமங்களுடைய பாசன வசதி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தால் முதல் கட்டப் பணிகளுக்காக 35 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். முதலில் இந்த 18 கிராமங்களும் நீர் வசதி பெற்றதற்குப் பின்னர் தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்த துணைக்கால்வாய்த் திட்டம் பரிசீலிக்க முடியும். ஆகவே, மூல திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் வரும் காலங்களில் அவர் கேட்கின்ற அந்தத் துணைத் திட்டத்திற்கான வாய்ப்பை இந்த அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 53, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

53—

குடிநீர் வழங்க நடவடிக்கை.

*9286—திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் தொகுதியில் பல ஊர்களுக்குக் குடிநீர் வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு, திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1992-93-ஆம் ஆண்டில் 14 குடியிருப்புகளில் முழுமையாகக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தவும் 10 குடியிருப்புகளுக்கு பகுதி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தவும், எஞ்சிய குடியிருப்புகளுக்கு அவற்றின் தகுதிக்கேற்ப இனி வரும் ஆண்டுகளில் படிப்படியாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் மலையனூர் என்ற ஊருக்கு நீண்ட நாட்களாக குடிநீர் சப்ளை இல்லாமல் இருக்கிறது. படாளம் கூட்டு ரோடு அருகிலுள்ள கொளப்பாக்கம் என்ற கிராமத்தில் சுமார் ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. அங்கே ஒரே ஒரு போர் வெல் குழாய் கிணறு தான் இருக்கிறது. அந்த மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். தேவாதூர் என்ற கிராமத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, கட்டப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. அந்த நீர்த் தேக்கத் தொட்டி மேற்கொண்டு கட்டப்படாமல் இருக்கிறது. பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தாதகுப்பம் மற்றும் புலிக்கோடு ஆகிய கிராமங்களில் நீர்த் தேககத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு குழாய் பதிக்கப்பட்டு, மின் மோட்டார் ஷெட் கட்டப்பட்டு கிணறு இல்லாமல் இருக்கிறது. செய்யூர் என்ற ஊரில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள். உங்கள் தொகுதி முழுவதும் இதில் வராது. உங்கள் தொகுதியிலுள்ள மற்ற எல்லாக் கிராமங்களுக்கும் என்று ஒரே வரியில் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. பி. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி குறைவாக இருப்பதால் கருணை உள்ளம் கொண்ட தெய்வத் தாய் அரசு இந்த குறையைப்போக்கி விரைவில் மதுராந்தகம் தொகுதியில் குடிநீர் வசதி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் மதுராந்தகம் மற்றும் விளாத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இவற்றில் சுமார் 462 குடியிருப்புகள் இருக்கின்றன. இதில் 190 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மதுராந்தகத்தில் 106 குடியிருப்புகளும், விளாத்தூரில் 84 குடியிருப்புகளும் ஆக 190 குடியிருப்புகளுக்கு முழுமையாகத் தண்ணீர் தேவையை இந்த அரசு பூர்த்தி செய்திருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று தமிழகத்தினுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அளித்த அறிவுரையின்படி 1992–93-ஆம் ஆண்டில் 14 குடியிருப்புகளுக்கு சுமார் 43 இலட்சம் ரூபாய் செலவில் முழுமையாக குடிநீர் வசதி செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் மார்ச், 1993க்குள் முடிக்கப்படும். எஞ்சியிருக்கிற குடியிருப்புகளுக்கும் படிப்படியாக நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 54, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

54—

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம்.

*10480—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986–ல் ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று மாநில அரசின் சார்பாக மைய அரசுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் (உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கூறுவதற்காக மைய அரசு ஒரு குழுவை நியமித்தது. அதிலே தமிழக உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் ஒரு உறுப்பினராக இருந்தார்கள். அந்தக் குழு தன்